# தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் அன்பான வேண்டுகோள் !

சுற்றுச்சூழல் துறையின் சார்பில் பொங்கல் நல்வாழ்த்துக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். **"போகி"** தமிழ் வருடத்தின் மார்கழி மாதத்தில் கடைசி நாளன்று, அதாவது தமிழர் திருநாளம் தைக்கு முந்தைய நாளில் கொண்டாடப்படுகிறது. கிரிகோரியன் நாட்காட்டியின் படி வழக்கமாக இப்பண்டிகை ஜனவரி மாதத்தின் 13ஆம் நாளில் கொண்டாடப்படும். ஆனால் சில ஆண்டுகளில் ஜனவரி 14 ஆம் நாளிலும் கொண்டாடப்படுகிறது. ஆனால், மார்கழி மாதத்தின் இறுதி நாளையே **போகிப்** பண்டிகையாக தமிழ் நாட்டில் கொண்டாடப்படுகிறது.

தற்போதைய வழக்கத்தில் உள்ள பழைய பொருட்கள், தேவையில்லாத ஆடைகள் மற்றும் துரக்கி எரியும் நெகிழிகள் ஆகியவற்றை எரித்து போகிப் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். போகிப் பண்டிகை அன்று டயர்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பழைய பொருட்களை எரிப்பதினால் **"டயாக்ஸின்"** என்னும் நச்சுப்புகை பரவும். அதனால் கண், மூக்கு தொண்டையில் எரிச்சலும் நுரையீரல் சம்மந்தப்பட்ட புற்றுநோய், தோல் நோய் போன்ற நோய்களும் ஏற்படும், டயர்கள், பழைய துணிகள் மற்றும் இதர கழிவுகளை எரிப்பதினால் காற்று மாசுபடுதல் மற்றும் ஓசோன் படலத்தில் பாதிப்பு ஏற்படுதல் ஆகியவை உண்டாக்குகின்றன.

எனவே, வீட்டிலேயே தேவையற்ற பொருட்கள் அதாவது ஆடைகள், காகிதங்கள், அட்டைகள், கட்டைகள், நெகிழி ஆகியவற்றை தனித் தனியாகப் பிரித்து சேகரித்து அதனை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளிடம் சேர்த்திடுங்கள். அவை மிகவும் பயனுள்ளதாக அமையும். அதனால் வீடும் நகரமும் துரய்மையாக இருக்கும்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் மூலமாக விழிப்புணர்வு பேரணிகள் மற்றும் கருத்தரங்குகள் தேசிய பசுமைப்படை மற்றும் சூழல் மன்றங்கள் வாயிலாக மக்களுக்கு புகையில்லா போகிப் பண்டிகையை கொண்டாட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

***"சுற்றுச்சூழலை காப்போம் ! இயற்கையை பாதுகாப்போம்!***
***புகையில்லா போகிப் பண்டிகையை கொண்டாடுவோம்"***

**இயக்குநர்**

**சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை**